சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 18.11.2025
பி.வா.சா.1 – ஜான்சிராணி W/o. குமரன்
O.S. No.164 /2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
முதல் விசாரணை தொடர்ச்சி:

என் தாயார் ஜெயம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூர் முன்பாக என் அத்தை பாப்பா, அவரது கணவர் பொன்னம்பலம், அவரது மகன் சக்திவேல் மீது விளம்புகை மற்றும் உறுத்துகட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்த வழக்கின் பிராது நகல் பி.சா.ஆ.1. மேற்படி வழக்கின் பிரதிவாதிகளான பாப்பா மற்றும் இருவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரை நகல் பி.சா.ஆ.2. மேற்படி அ.வ.எண்.214/2011, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூரில் வழங்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3.என் அத்தை பாப்பா, என் அப்பாவின் அப்பாவான முத்தையா மற்றும் ஜெயம், என் தாயார் ஜெயம், என் அத்தை அமிர்தம், என் உடன்பிறந்த சகோதரர் முல்லைசெல்வன், என் அக்கா தங்கம் என் மீதும், என் தங்கை கவிதா மீதும், என் சித்தப்பா மனைவியான காந்திமதி, என் சித்தப்பா மகனான முத்துலிங்கம், சுப்பிரமணியன், சேது மீது தாக்கல் செய்த அ.வ.எண்.265/2011வழக்கின் பிராது சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4. மேற்படி அவ.எண்.265/2011ல் 1ம் பிரதிவாதியான என் அப்பாவின் அப்பா முத்தையா தாக்கல் செய்த எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5. மேற்படி அ.வ.எண்.265/2011ல் என் தாயார் ஜெயம் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.6. அ.வ.எண்.54/2019 இ தே நீதிமன்றத்தில் நான் என் சகோதரி கவிதா, என் சகோதரன் முல்லைசெல்வன், என் தாயார், என் அக்கா தங்கம் ஆகியோர், முத்துலிங்கம், சுப்பிரமணியன், சேதுராமன், காந்தி மீது பாக வழக்கு கோரி தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பாணை நகல் பி.சா.ஆ.7. மேற்படி அசல் வழக்கு தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்து AS 75/2023 வழக்கில் 6வது

மாவட்ட கூடுதல் நீதிமன்றம், மதுரை அவர்கள் மேல்முறையீட்டை அனுமதித்த தீர்ப்பாணை நகல் பி.சா.ஆ-8. மேற்படி மே.வ.எண்.43/2022 ன் முத்துலிங்கம், சுப்பிரமணியன், சேதுராமன், காந்தி ஆகியோர் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான தீர்ப்பாணை சான்றிட்ட நகல் பி.சா.ஆ.9

(குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.18 22:39:04 +0530

Sub Judge

Melur